தமிழ்
மருத்துவப் பொழில்

திங்கள் வெளியீடு.

மலர் 1	பிப்ரவரி, 1941	இதழ் 2

நமது கொள்கை

நாம் கையாண்டுவருவதும் கற்றுவருவதுமான தமிழ் மருத்துவமாகிய சித்த மருத்துவ முறையானது மிகவும் தொன்மையானதென்பது யாவரு மறிந்ததே. இம்முறையானது ஒரு காலத்தில் இந்தியா முழுமையுமே யன்றி, ஆயிரக்கணக்கான வாண்டுகட்கு முன் கடல் கொள்ளப்பட்ட விரிந்த நிலப்பரப்பிலிருந்த தமிழர்களால் கையாளப்பட்டு வந்திருந்ததென்பது ஆராய்ச்சியாளர்களின் துணிபு. பல நாட்டார்களின் ஆட்சியாலும், பிற உள் நாட்டுக் கலகங்களினுலும், அரசர்களின் ஆதரவு குறைவினுலும், இம்முறை நாளடைவில் தன் உயர்ந்த நிலையினின்றும் வீழ்வதாயிற்று. நந்தமிழ் நாட்டின்கண் அவ்வப்போது ஏற்பட்ட பல்வேறு மாறுபாடுகட்கிடையே சித்த முறை இன்றுகாறும் அழியாமலிருத்தற்குக் காரணம் அஃது உண்மையைத் தனக்கு அடிப்படையாகக் கொண்டிருத்தலேயாம். இப்பொழுதும் சிறப்பு குறையவில்லை. எங்ஙன மெனின்: இன்றும் பெரும்பான்மையான மக்கள் அதை விரும்பி ஆதரிக்கின்றமையின்; கனம் பொருந்திய பிரிட்டிஷ் அரசாட்சியில் காலஞ் சென்ற பனகால் அரசர் முதன் மந்திரியாயிருந்த சமயத்தில் அவரும் மற்றைய அமைச்சர்களும் சித்த வயித்தியத்தின் பெருமையையும் அதனுல் மக்கட்குண்டாகும் நன்மைகளையும் நன்குணர்ந்து அதை ஆதரித்தனர். அதற்காக எம் நன்றி யறிவித்தலான வணக்கத்தைச் செலுத்துகின்ருேம். சுமார் பதினைந்தாண்டுகட்கு முன்னரே சித்த மருத்துவத்தின் பெருமை அங்கீகரிக்கப் பெற்றிருந்தும், மூன்ருண்டுகட்கு முன்னர் அதன்

வைத்தியர்களின் பெயர்கள் பதிவு செய்யப் பெற்றிருந்தும் இன்று காறும் இம்முறை ஓங்குதற்குரிய போதுமான ஆதரவுகள் கிடைத்த பாடில்லை. பல்லாண்டுகளாகத் தமிழர்கள் அடிமைப் பட்டிருத்த லானும் தம்பாலுள்ள சீரிய நூற்களைப் பிறர் கவர்வாரென்ற அச்சத் தாலும் இவர்கள் அந்நூற்களையும், இவர்களின் சிறந்த அனுபவங்களை யும் பிறருக்குப் பயனுறும் வண்ணம் வெளிப்படுத்தாதிருந்தனர்.

மதித்தற்குரிய சித்த மருத்துவ சிகாமணிகளான காலஞ்சென்ற சி. த. சுப்பிரமணிய பண்டிதர், ஹக்கீம் ம. அப்துல்லா சாகிப், வைத் தியரத்ன க. ச. முருகேச முதலியாராகிய இவர்களும், பண்டிட் மா. வடி வேலு முதலியார், வெ. ரா. சுந்தரம் பிள்ளை, சி. கண்ணுசாமி பிள்ளை ஆகியோரும் சில அருமையான நூற்களை வெளிப்படுத்திச் சித்த வைத் திய உலகிற்குப் பேருதவி செய்திருத்தல் போற்றற்பாலது. இன்னும் பெரும்பான்மையான நூற்கள் வெளியிடப் படவில்லை வெளியிடப் பெற்றவற்றுள்ளும், பல நூற்கள் இப்பொழுது கிடைக்கவில்லை. யாது காரணத்தினலோ போதுமான நூல்கள் நன்முறையில் பதிக்கப் பெறவில்லை. ஆகையால் பல அருமையான நூற்களைப் பகுதி பகுதி யாக வெளியிடவெண்ணி மருத்துவப் பொழில் என்னும் ஒரு திங்கள் வெளியீட்டைத் தொடங்கியுள்ளோம்.

இதன் நோக்கம்

(க) மேற்சொல்லியவாறு, இதுவரை வெளிவராததும், வெளி வந்தும் பிழை நிரம்பியதும், ஒரு முறை அச்சேறி மறுமுறை அச் சேருததுமான சித்த மருத்துவ நூல்களைத் திருத்தியும் உரையெழு தப்படாதவைகட்கு உரை யெழுதியும், பகுதிபகுதியாக வெளியிடல்,

(உ) நாடி, நோய்த்தீர்வு, உயர்ந்த உலோகங்கள் முதலிய வைகளைப்பற்றி அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகளை அனுபவமும் வைத் திய தேர்ச்சியும் கொண்ட மருத்துவர்களைக் கொண்டு எழுதுவித்தல்,

(ங) இதுவரை அவரவர்கள் அனுபவத்தில் கண்ட சில தீரா அரிய நோய்களையும் பரிகாரங்களையும் எழுதுவித்தல்,

(ச) இதுகாறும் மருத்துவர்களும், மருத்துவத்தில் பழக விரும்புவோரும் மருத்துவ மாணவர்களும் மருந்து வகையை விரும்பி அதில் பழகுவதையே மருத்துவமெனக் கொண்டிருந்தாரெனத் தோன்றுகின்றது. எங்ஙனமெனில்: நம் நாட்டு மருத்துவ நூல்கள்

யாவும் பெரும்பாலும் மருந்து வகைகளையே கூறுகின்றமையாலாம். நோயறியாது மருந்தறிதல் அவ்வளவு உயர்ந்த தன்மையதாகாது. ஆதலால் தற்காலம் நோய் வகைகள் முழுமையும் எழுதப்படா விடினும் சிற்சில முக்கிய நோய் விளக்கங்கள் இதில் எழுதப்பெறும்.

இப் பத்திரிகையின் பதிப்பாளர்கள் பல கையேட்டுப் பிரதி களையும் கிடைத்தற்கருமையான பல நூற்களையும் வெளியிடும் நல் நோக்கத்துடன் ஒப்பு நோக்கி ஒழுங்குபடுத்தி அச்சிடத் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். பத்திரிகைக்குத் கவுரவ ஆசிரியராயிருந்து உதவிபுரிய முன்வந்துள்ள தமிழ்ப்பேராசிரியரும், மருத்துவப் பேராசிரியருமான பண்டிட் மாங்காடு வடிவேல் முதலியார் அவர்கட்கு நமது மனமார்ந்த வணக்கத்தைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

இன்னும் தங்களிடமிருந்த உயர்ந்த ஏட்டுப் பிரதிகளை யெமக் குத் தந்து உதவிபுரிந்த பண்டிட். வல்லை-ஷண்முகசுந்தர முதலியார், பண்டிட்-வெ. ரா. சுந்தரம்பிள்ளை, திரு. சி. குப்புசாமி முதலியார், திரு. க. ச. உத்தமராய முதலியார் ஆகிய இவர்கட்கு நமது நன்றி என்றும் உள்ளது.

அன்பர்களே !

நீங்கள் அனைவரும் எமக்குக் கீழ்க்கண்ட வகைகளில் எவ்வாற்ரு னும் உதவிபுரியுமாறு வேண்டுகின்றோம்.

(க) பத்திரிகைக்குச் சந்தாதாரராகச் சேர்தலும், தங்க ளுடைய நண்பர்களைச் சேருமாறு செய்வித்தலும்.

(உ) சித்தவைத்தியத்தை அறிய விரும்புகின்றவர்களின் விலா சத்தைத் தெரிவித்தலும்.

(ங) சித்த வைத்திய சம்பந்தமான ஏட்டுப் பிரதிகளோ, கையெழுத்துப் பிரதிகளோ கிடைத்தால் எமக்கு அனுப்பி உதவு தலும்,

(ச) சித்த வைத்திய சம்பந்தமான கட்டுரைகள், ஆராய்ச்சி யுரைகள், குறிப்புகள், வினாக்கள் ஆகியவற்றைத் தெரிவித்தலும்,

(ரு) சித்த வைத்தியம் முன்னேற்ற மடைவதற் கனுகூலமான வசதிகளையும் ஆதரவுகளையும் அளித்தல் முதலியனவும்,

நாங்கள் எடுத்திருக்கும் முயற்சிக்குத் தாங்கள் செய்யும் உதவி பத்திரிகையின் வாயிலாக அவ்வப்போது பிரசுரிக்கப்பட்டுப் போற் றப் பெறும்.

இதைச் சித்த வைத்தியர்களும் மாணவர்களுமேயன்றித் தமிழ் வயித்தியத்தின் சிறப்பை உணர்ந்த எல்லா அன்பர்களும் ஆதரிக்கவேண்டுமென்ற எண்ணத்துடனே இதன் ஆண்டுச் சந்தா ரூபாய் ஆருக விதிக்கப்பட்டுள்ளது. இச் சந்தாவை நாற் பகுதியாக மூன்று திங்கட்கொருமுறை ரூபாய் ஒன்றரை வீதமும் செலுத்தலாம். ஆகையால் இவ் வேண்டுகோளைக் கண்ணுறும் ஒவ்வொரு அன்பரும் சந்தாதாரராகச் சேர்ந்து இதனை யாதரிக்குமாறு வேண்டுகின்றனம்.

கவர்ன்மேண்ட் இந்திய மருத்துவ பாடசாலை சித்த மாணவர் கழகத்தின் ஆதரவினுல்

பண்டிட் திரு. M. வடிவேலு முதலியார்
ஆசிரியராகவும்
டாக்டர் K. காசிநாதன், H. P. I. M.
,, C. S. உத்தமராயன், L. I. M.
,, V. N. சாமராவ், L. I. M.
,, C. துரைராஜன், L. I. M.

இவர்கள் தமிழ் மருத்துவப் பொழிலுக்குப் பதிப்பாளர்களாகவும்,

டாக்டர் C. N. குப்புசாமி, H. P. I. M.
,, R. தியாகராஜன், L. I. M.
,, C. துரைராஜன், L. I. M.
T. K. சிவசாமி
M. காளையப்பன்

இவர்கள் காரியக்கமிட்டி அங்கத்தினர்களாகவும் நியமிக்கப் பெற்றிருக்கிறார்கள்.

C. துரைராஜன்,
தலைவர்,
சித்த மாணவர் கழகம்.

செய்யப்பால் சூரணத்தைத் தூவிக் கிண்டு
திறமான தேனெய்தா னுரியு ழக்கு
கையப்பா விட்டதிலே கிண்டிக் கிண்டிக்
கருவாக மெழுகுபத மாக வாங்கி
மையப்பா பாக்களவி லிருநே ரந்தான்
மைந்தனே மண்டலந்தான் கொண்டா யானால்
தையப்பா தீருகின்ற வியாதி கேளாய்
தருவான வாயுவொடு வாத மாமே. (78)

ஆமப்பா வுஷ்ணங்கள் பித்த வாயு
அப்பனே சரீரத்தி லுளைவு குத்து
போமப்பா வலிகடுப்பு மெரிச்சல் பேதி
பொருமலுடன் வாயுவென்ற கிராணி தீரும்
வேமப்பா வலிகடுப்பு மஸ்தி வெட்டை
விருதான வாந்தியெல்லாம் விழலாய்ப் போகுஞ்
சாமப்பா வரக்கினிட தைல மூழ்கு
சகலசுரம் விட்டோடும் சார்பு பாரே. (79)

கண்டங்கத்தரி லேகியம்.

சார்வான லேகியந்தா னென்று கேளாய்
சாற்றுகிறேன் கண்டங்கத் தரிதூக் கப்பா
ஆர்வாக விடித்ததனைத் தூணி நீரில்
அக்கினியி லெட்டொன்றாய்க் காய்ச்சி விட்டுச்
சேர்வாகப் பனைவெல்லம் பலந்தான் பத்து
சேர்த்ததிலே பால்படிதான் பாகு சேரில்
தார்வாகத் திரிகடுகு திரிப லாதி
தருவான வாய்விளங்க மோம மாமே. (80)

ஓமமொடு குரோசானி லவங்கப் பட்டை
உத்தமனே சீரகமு நறுக்கு மூலம்
நாமமோ டத்தித்திப் பிலியுங் கோஷ்டம்
நலமான தாளிசமு மக்கரா காரம்
வாமமொடு வகையொன்று பலந்தா னென்று
வளமாகச் சூரணித்துப் பாகிற் றூவிச்
சேமமோ டாவினெய் படிகால் விட்டுத்
திறமான தேனதிலே படிகால் வாரே. (81)

வார்த்ததிலே கிண்டியது மெழுகு போலே
வளமான லேகியம்பாக் களவு வீதம்
பார்த்ததிலே யிருநேரங் கொண்டா யானாற்
பறக்குமடா கழல்வாதம் பாரிச சூலை

தேற்றியே கிருமியாம் புழுக்க ளெல்லாந்
 தேகத்தை விட்டோடுங் கர்ப்ப வாயு
சாற்றதிலே யுஷ்ணநோய் பித்த மெல்லாஞ்
 சாராது சிந்தாதி லேகியங் கேளே. (82)

சிந்தாதி லேகியம்.

கேளப்பா வாறுதிங்கள் சென்ற காடி
 கிருபையாய்ப் படிபத்தும் புளித்த மோரில்
நாளப்பா படிபத்துங் கூட விட்டு
 நலமான புளியிலைதாக் கிடித்துப் போட்டுக்
கேளப்பா துருப்பிடித்த விரும்பெடைதான் போட்டுக்
 கொதிக்கவைத் தெட்டொன்று யிருத்துக் கொண்டு
வேளப்பா கையானீர் படிதா னிரண்டு
 விருதான விஞ்சிரசம் படிதா னென்றே. (83)

ஒன்றான பழச்சாறு படிதா னென்று
 முத்தமனே நெருஞ்சிரசம் படிதா னென்று
சென்றான சிறுகீரை படிதா னென்று
 செருப்படிதான் படியொன்று தென்னம் பூநீர்
பண்டான படியொன்று கீழா நெல்லி
 பதருமற் படியொன்று கூடச் சேர்த்துக்
கண்டான வாவின்பால் படிதா னாலு
 கருவான பனைவெல்லம் பலந்தான் பத்தே. (84)

பத்தாகக் கரைத்துவிட்டுப் பாகு சேரில்
 பக்குவமாங் கடைச்சரக்கு திரிகடு கோமம்
நத்தான திரிபலை கோஷ்ட மாஞ்சில்
 நலமான சீரகம்வால் மிளகு மேலம்
கைத்தான கிராம்புதா ளீச பத்திரி
 கருவான லவங்கத்தோ லானைத் திப்பிலி
ஒத்தாத பலமொன்று தூக்கிக் கொண்டே
 யுருவாக இளவறுப்பாய்ச் சூரணந்தான் செய்யே. (85)

செய்யப்பா முன்பாகிற் றூவிக் கிண்டிச்
 செய்மாக வாவினெய் படிதான் வாரு
கொய்யப்பா தேனதிலே படிதான் வாரு
 குழம்பாக லேகியத்தைப் பதனம் பண்ணு
பையப்பா விருகழஞ்சி லிருநேரங் கொள்ளப்
 பறக்குமடா பாண்டுவகை யெல்லாந் தீரும்
மையப்பா பித்தவெட்டை பித்த வாயு
 மயக்கமோ டக்கினியா மந்தந் தானே. (86)

மந்தமொடு வெளுப்பான தேக மெல்லாம்
வண்டுபோல் கறுக்குமோர் மண்ட லத்தில்
அந்தமா மகோதரம்பீ லிகையாம் வாயு
அப்பனே சோகையொடு கிராணி மூலம்
பொந்தமா முடம்பெரிப் பிளப்போ டீளை
பொருமலுட னுப்புசங்க ளிரைச்சல் தீரும்
பந்தமாம் பத்தியங்கள் நன்றாய்க் காத்துப்
பக்குவமா மண்டலத்தில் சொல்லக் கேளே. (87)

மகா வில்வாதி லேகியம்.

சொல்லக்கேள் புலத்தியனே யின்ன மொன்று
சுருக்காக நோய்க்கெல்லா மகாவில் வாதி
வல்லக்கேள் வில்வத்தின் மூல மப்பா
வளமாகப் பலம்நூறு வெட்டி வந்து
நல்லக்கேள் விலாமிச்சை வாகை பாதிரி
நலமாக நன்னாரி பருவி ளாவும்
அல்லக்கேள் சிற்றாமல்லி பேரா மல்லி
அழகான சிறுவிளா வேரு மாமே. (88)

ஆமப்பா சிறுவாகை முன்னை யோடே
ஐயறுக்கு முசுமுசுக்கை கொடிவேலி தேற்றான்
நாமப்பா வகையொன்று பலமூன் றாகும்
நலமாக விடித்திரு தூணி நீரில்
வேமப்பா வெட்டொன்றாய் வடித்துக் கொண்டு
வெருளாதே கொம்மட்டிப் பழச்சா றிஞ்சிக்
காமப்பா சாறுபடி யொன்று விட்டுக்
கலங்காதே சர்க்கரைசேர் நாலு மாமே. (89)

ஆமப்பா வாவின்பால் படிதா னிரண்டும்
அப்பனே கரைத்தெல்லாம் பாகு சேரில்
போமப்பா திரிகடுகு திரிப லாதி
புகழான லவுங்கமோ டேலங் கோஷ்டம்
நாமப்பா மதுரகந்தஞ் சீரம் ரண்டு
நலமான விளங்கமொடு சகஸ்திர பேதி
வாமப்பா தாளிசம்செண் பகப்பூ அக்கரா
வளமான மல்லிவிளா வரிசி தேக்கே. (90)

தேக்கான முந்திரிகை பேரீச்சு வில்வந்
திறமான வாலுழுவை மாஞ்சில் சிறுநாகம்
பாக்கான நாகணமும் பருத்தி வித்தும்
பகருவே னிம்பவித்தி லுப்பைப் பூவும்

தூக்கான வகையொன்று பலமொன் ருகச்
சூரணித்துப் பாகிலே தூவிக் கிண்டி
நீக்கான தேனதிலே படியரைதான் விட்டு
நினைவாக வாவினெய் படியரைதான் வாரே. (91)

வார்த்தப்பா மெழுகுபோல் கிண்டிக் கிண்டி
வளமான லேகியத்தைப் பதனம் பண்ணு
கோத்தப்பா லேகியத்தைப் புன்னைக்கா யளவு
கொண்டுவர விருநேரந் தீரு நோய்கள்
சாற்றப்பா சுவாசமுட னரோச கங்கள்
தவறுதே வீக்கமொடு சத்தியெரி பாண்டு
காத்தப்பா விஷபாண்டு வயிற்றெ ரிச்சல்
கனமான வுப்புசங்கள் கிராணி போமே. (92)

போமப்பா கைகாலி லெரிவு காந்தல்
புகலும்வெள் ளோக்காள மன்ன த்வேஷம்
நாமப்பா சூலையொடு கயந்தா னெட்டு
நலமான சுரங்களறு பத்து நாலுந்
தாமப்பா பித்தமென்ற நாற்ப துந்தான்
தளமான வஸ்திசுர மருந்தீ டெல்லாம்
ஆமப்பா வதிசார முள்ளில் ரோகம்
அருளான லோகம்வைத்துக் கொள்ளு கொள்ளே. (93)

கூஷ்பாண்ட லேகியம்.

கொள்ளவே கூஷ்பாண்ட லேகி யந்தான்
குணமான கூஷ்பாண்டச் சாறுபடி நான்கு
விள்ளவே தாழையிட விழுதின் சாறு
விருதான படியொன்று தென்னம்பூ வொன்று
தள்ளவே பழச்சாறு படிதா னென்று
தளமான வாவின்பால் படியி ரண்டு
பள்ளவே சர்க்கரைதான் பலமோ பத்து
பதருமல் கரைத்ததனைப் பாகு சேரே. (94)

சேருமே சீரக மல்லி கோஷ்டம்
திறமான மிளகுமா சிக்கா யேலம்
காருமே சாதிக்காய் சாதி பத்திரி
கருவான மதுரமொடு தாளி சந்தான்
வாருமே ஒருவகைக்குப் பலமொன் ருக
வகையாகச் சூரணித்துப் பாகிற் றூவி
நேருமே தேனெய்படி யரைதான் விட்டு
நினைவாகக் கூழ்போலே கிண்டி வாங்கே. (95)

வாங்கியே புன்னைக்கா யளவு வீதம்
வளமான லேகியத்தைக் கொண்டா யானால்
நீங்குமே காமாலை சோகை யெல்லாம்
நீங்காத வஸ்திசுர மஸ்தி வெட்டை
தாங்கியதோர் பிரமியங்கள் வெள்ளை வீழ்தல்
தளமாகும் தேகபுஷ்டி விந்து வூறும்
பாங்கியே யுஷ்ணநோய் நீர்ச்சு ருக்கும்
பறக்கும்புளி புகையிலைநீ தள்ளிக் கொள்ளே. (96)

சரபுங்க வில்வாதி லேகியம்.

கொள்ளவே யின்னமொன்று சொல்லக் கேளாய்
குணமான சரபுங்க வில்வாதி லேகியம்
விள்ளவே வில்வவேர் முட்காய் வேளை
விருதான சங்கம்வேர் வகைக்குத் தூக்கு
தெள்ளவே சிற்றுமல்லி சிற்று முட்டி
திறமான பேர்மல்லி கூந்தல் முள்ளி
நள்ளவே சாரணைவேர் கண்டங் காலி
நலமான விலாமிச்சை சீந்தில் தானே. (97)

தானென்ற கொடிவேலி பொன்மு சுட்டை
தளமான நன்னாரி சிறுதேக் கப்பால்
வானென்ற மூலிவகை பதின்மூன் றுந்தான்
வளமான பலமஞ்சு மிடித்து நைய
வேனென்ற வாற்றுநீர் தூணி விட்டு
விளங்கவே யெட்டோன்றாய் நிறுத்திக் கொண்டு
கானென்ற கன்னல்வெல்லஞ் சேர்தா னுங்கு
கருவான வாவின்பால் படியிரண்டு சேரே. (98)

சேர்த்தப்பா கரைத்ததிலே பாகு செய்து
திறமான திரிகடுகு திரிப லாதி
வார்த்ததிலே கிராம்பேல மிருசி ரகந்தான்
வளமான கோஷ்டந்தா ளீச பத்திரி
தார்த்ததிலே யோமமிரண் டரத்தை யிரண்டு
தளமான கொத்துமல்லி லவங்கப் பட்டை
ஆர்த்ததிலே யக்ராகார மரத்தை திப்பிலி
யதனுடனே வால்மிளகு சாதிக்கா யாமே. (99)

ஆமப்பா வகையொன்று பலமொன் றுக்கி
யவற்றையிள வறுப்பாகச் சூர ணித்துச்
சேமப்பா பாகிலே தூவிக் கிண்டித்
திறமான தேன்படிநெய் யரைதான் விட்டு

நாமப்பா குழம்புபோல் வாங்கி வைத்து
நலமாகக் கழஞ்சுநிறை யிருநே ரங்கொள்
தாமப்பா பித்தவெட்டை பாண்டு வாறுந்
தவறுண்டுபோகுமடா கயமெட்டுந் தானே. (100)

தானென்ற குன்மமெட்டுங் கிராணி யாறுந்
தடமான வாய்கசப்பு வெள்ளோக் காளந்
தேனென்ற வாயூற லக்கினி மந்தந்
திறமான சூலையொடு கைகால் காந்தல்
பானென்ற பித்தமது நாற்ப துந்தான்
பறக்குமடா மண்டலத்தில் பரிந்து கொள்ளு
வேனென்ற பத்தியந்தான் புளிக சப்பு
விளங்கியதோர் புகையோடு பெண்ணுந் தள்ளே. (101)

தள்ளப்பா திரிலோகம் வைத்துக் கொள்வாய்
தளமான வாலரச செந்தூ ரந்தான்
கொள்ளப்பா லோகசெந் தூரந் தானுங்
குறையாமற் பணவெடைதான் வைத்துக் கொள்வாய்
தள்ளப்பா பித்தமென்ற தெல்லாம் போகுந்
தருவான சேத்துமங்கள் தொண் ணூற் றுறும்
விள்ளப்பா கடல்புக்குங் கண்டு கொள்வாய்
விருதாக வின்னமொரு சேதி கேளே. (102)

கண்டங்கத்தரி லேகியம்.

கேளப்பா கண்டங்கத் தரிய தான
கெட்டியாம் லேகியந்தான் சொல்லக் கேளாய்
நாளப்பா வாற்றுமுள்ளி பலந்தா னூறு
நலமான கரிமுள்ளி யதற்குப் பாதி
தாளப்பா சிற்றுமுட்டி பேரா முட்டி
தளமான மிளகரணை கொடிவேலி களாவும்
ஆளப்பா வாதண்டை சிறுகாஞ் சோரி
அதனுடன் விலாமிச்சை முட்காய்வேளை யாமே. (103)

ஆமப்பால் கோரைபுட னுத்தா மணியும்
அருமையாம் கழற்கொடியு மாவி லிங்கம்
தாமப்பால் வகையொன்று பலமோன் றுகத்
தவறும விடித்திரு தூணி நீரில்
வேமப்பா வெட்டொன்று யிருத்து வாங்கி
வேண்டுமோர் கொம்மட்டிப் பழநற் சாறு
தாமப்பா படியரையுங் கூட விட்டுத்
தளமான வாவின்பால் படிதா ணிரண்டே. (104)

இரண்டான சர்க்கரைதான் பலமூ வைந்து
நினைவாகக் கரைத்ததிலே பாகு சேரில்
கண்டான கடைச்சரக்கு சொல்லக் கேளாய்
கருவான திரிகடுகு திரிப லாதி
நன்றான சிங்கியிரு சீர கந்தான்
நலமான வரத்தையக்கரா லவங்கப் பட்டை
பின்றான லவங்கஞ்சா திக்காய் பத்திரி
பேராத்தை லவங்கப்பத் திரியுங் கூட்டே. (105)

கூட்டுவாய் வகையொன்று பலமொன் றாகக்
கூசாம லிளவறுப்பாய்ச் சூர ணித்து
நாட்டுவாய் பாகிலே தூவிக் கிண்டி
நலமாகத் தேன்படிநெய் யரை தான் விட்டுக்
காட்டுவாய் மெழுகுபோல் கிண்டிக் கிண்டிக்
கசகாமல் பீங்கானில் வழித்து வைத்துக்
கீட்டுவாய் லேகியந்தான் புன்னைக்காய் வீதம்
திறமாக மண்டலத்தில் தீரு நோய்கேள். (106)

கேளுதான் கயமெட்டும் குன்ம மெட்டும்
கெடியான வாதமென்ற தெண்பதும் போம்
நாளுதா னிரைப்பீளை யிழிநீர்க் கோவை
நாடாது இசிவுமுதல் கழல்வா தங்கள்
தாளுதான் கர்ப்பவெட்டை கர்ப்பச் சூலை
தவறுண்டு போகுமது புழுக்க ளெல்லாம்
ஆளுதான் தாளகமும் லோகங் கூட்டி
அடைவாகக் கொண்டுவரத் தீரும் பாரே. (107)

கபாடலேகியம்.

பாருமே கபாடலே கியத்தைச் சொல்வேன்
பண்பான நாவலொடு வரசு வத்தி
சேருமே கருங்காலி யொதியம் பட்டை
திறமாகப் பலம்பத்து நிறுத்துக் கொண்டு
சாருமே யிடித்துநையத் தூணி நீரில்
தளமாக வடுப்பேற்றி யெட்டொன் றாக்கி
வாருமே பனைவெல்லம் பலந்தான் பத்து
வளமாகக் கரையதனிற் பாகு செய்யே. (108)

பாகிலே தூவுதற்கு மருந்து கேளாய்
பதறாமல் கஞ்சாவைச் சுத்தி செய்து
பாகிலே பலமொன்று தூக்கிக் கொண்டு
பாங்கான மிளகுசுக்கு சீரகமும் கூடப்

பாகிலே யோமமொடு குரோசானி யோமம்
பருவமாய்ச் சிங்கிகாட் டாத்திப் பூவும்
பாகிலே வால்மிளகு சிறுநா கப்பூ
பக்குவமா மல்லியோ டேல மாகும். (109)

ஆகுமே கிராம்புடனே சாதி பத்திரி
அடைவான சாதிக்காய் விடையங் திப்பிலி
நாகுமே வகையொன்று பலமொன் றாக
நலமாக விளவறுப்பாய்ச் சூர ணித்து
வேகுமே பாகிலே தூவி யேதான்
வெகுசுறுக்காய்த் தேனெய்யும் விட்டுக் கிண்டித்
தாகுமே பீங்கானில் பதனம் பண்ணித்
தப்பாமல் மண்டலந்தான் பாக்களவு கொள்ளே. (110)

அளவாகக் கொண்டுவரத் தீரும் நோய்கள்
அதிகமுள்ள சூசிகா கிராணி வாயு
பளுவான கடுப்புமுதற் பாண்டு கிராணி
பாங்கான பேதியோ டுஷ்ண வாயு
களவாக மூலத்தின் கிராணி வாயு
கண்காணு தோடுமது மற்ற வாயு
வளமாகக் கிராணியெல்லாம் தீரும் தீரும்
மார்க்கமுட னின்னமொரு வரிசை பாரே. (111)

திப்பிலிரசாயனம்.

பாருமே திப்பிலிர சாயனஞ் சொல்வேன்
பகருகின்ற திப்பிலியும் பலந்தான் பத்து
சேருமே மிளகுமஞ்சு சுக்கு மஞ்சு
திறமான விருசீர மோம மிரண்டு
ஆருமே யரத்தையிரண்டு தாளிச பத்திரி
அடைவான லவங்கப்பத் திரியும் பட்டை
காருமே திரிபலே லவங்க மேலங்
கனமான கொடிவேலி பலமொன்று தூக்கே. (112)

தூக்கியே யிளவறுப்பாய்ச் சூர ணித்துச்
சுகமான சர்க்கரைதான் சமனாய்க் கூட்டித்
தாக்கியே தேன்விட்டுப் பிசைந்து கொண்டு
தப்பாமல் வெருகடிதான் கொள்ளும் போது
தேக்கியே யிளைப்போடே யீளை காசம்
திறமான சேத்துமநோய் தொண்ணூற் றாறும்
நீக்கியே யுதரத்தில் வாயு வெல்லாம்
நீக்கிவிடு மண்டலத்தில் நினைவாய்ப் பாரே. (113)

மதுஸ்மிகி ரசாயனம்.

பார்த்திடுவாய் புலத்தியனே மேகவகை தீரப்
பண்பான மதுஸ்மிகி ரசாயனஞ் சொல்வேன்
சேர்த்திடுவாய் சீனமுத லமுக்க ராவேர்
திறமான வகையொன்று பலம்பத் தாகும்
சாற்றிடுவாய் நிலப்பனைவேர் பலந்தா னைந்து
தளமான தண்ணீர்மிட்டான் பலந்தானி ரண்டு
ஆற்றிடுவாய் நன்னாரி சங்கு மூலம்
அன்பான திரிகடுகு திரிபலையு மாமே. (114)

ஆமப்பா லவங்கத்தோல் லவங்கப் பத்திரி
அப்பனே சிறுநாகம் வாய்வி ளங்கம்
போமப்பா மல்லியிரு சீர மோமம்
புகழான குரோசானி அரத்தை கந்தம்
நாமப்பா சிறுதேக்கு கண்டங் காலி
நலமான கொடிவேலி விலாமிச்சை மூலம்
தாமப்பா தக்கோலம் வால்மிளகி னோடு
தளமான முந்திரிகை பேரீச்சுங் கூட்டே. (115)

கூட்டப்பா வெட்பாலை தாமரைக் கிழங்கு
குலமான சாதிக்காய் கிராம்பு பத்திரி
நாட்டப்பா கருவேம்பி னிலை வகைக்கு
நலமாகப் பலமொன்று நிறுத்துக் கொண்டு
காட்டப்பா விளவறுப்பாய்ச் சூர ணித்துக்
கருவான குங்குமப்பூ கோரோசனை கர்ப்பூரம்
வாட்டப்பா கழஞ்சுநிறை கூடச் சேர்த்து
வளமான சர்க்கரைசேர் நான்கு வாங்கே. (116)

வாங்கியே யாவின்பால் படிதா னுனு
வளமான சர்க்கரையைக் கரைத்துக் கொண்டு
பாங்கியே பாகுபத மாகும் போது
பதறாதே சூரணத்தைப் பாய்ச்சிக் கொண்டு
தேங்கியே தேன்படிதா னென்று வாரு
திறமான வாவினெய் யரைதா னப்பா
வாங்கியே மெழுகுபோல் கிண்டிக் கிண்டி
வளமான பீங்கானில் பதனம் பண்ணே. (117)

பண்ணப்பா விருநேரம் பாக்களவு கொள்ளப்
பரிவுடனே தீருகின்ற வியாதி கேளாய்
புண்ணப்பா கிரந்தியொடு சூலை தீரும்
புதுமையாங் கண்டத்தின் மாலை தீரும்

நண்ணப்பா வாயுவொடு வாத மெல்லாம்
நாடாது பிரமியங்கள் லிங்கப் புற்று
தண்ணப்பா சேத்துமநோய் தொண்ணூற் றாறுந்
தவறுண்டு போகுமடா பத்தியங் காரே. (118)

சௌபாக்கியசுண்டி.

காரப்பா வுலகத்தோர் நோய்க ளெல்லாங்
கலங்குமடா சவுபாக்கிய சுண்டி யென்றால்
நேரப்பா சுக்கதுதான் பலந்தா னெட்டு
நினைவாக மேற்றோலைச் சீவிப் போட்டுச்
சாரப்பா மொச்சைவிரைப் பிரமா ணந்தான்
தளமாக வேநறுக்கிப் புதுச்சட் டிக்குள்
சேரப்பா செம்முள்ளிச் செந்த ராவும்
திறமான முருக்கிலையுங் கரிசாலை யாமே. (119)

ஆமப்பா சிறுசெருப்பு காற்று வாட்டி
அப்பனே சாறுவகை படிகால் வீதம்
நாமப்பா புதுச்சட்டிச் சுக்கில் விட்டு
நலமாக வெவ்வேறே ரவியு லர்த்தித்
தாமப்பா விடித்துநன்றாய்ச் சூர ணித்துத்
தளமாக வடிகொண்டே யப்பால் வைத்துப்
போமப்பா தக்கோலம் வாலுழுவை வித்து
புகழான கூகைநீறு கரியபோளங் கூட்டே. (120)

கூட்டப்பா வாய்விளங்கந் தான்றிக்காய் நெல்லி
கூறான திப்பிலியுந் திப்பிலி மூலம்
நாட்டப்பா வகையொன்று பலந்தான் வாங்கி
நலமாக விளவறுப்பாய்ச் சூர ணித்துக்
கூட்டப்பா வழுக்கரு பொன் முசுட்டை
குருவான கண்டங்கத் தரிநன் னாரி
நீட்டப்பா நிலப்பனையும் வகையொன் றுக்கு
நினைவாகப் பலமிரண்டு நிறுத்துக் கொள்ளே. (121)

கொள்ளப்பா சுத்திசெய் திடித்துத் தூளாய்க்
குணமாக வடிகட்டி வைத்துக் கொண்டு
விள்ளப்பா மூவகைத்தூ ளொன்றாய்க் கூட்டி
விளங்கவே சர்க்கரையைச் சமனாய் வாங்கி
நள்ளப்பா வாவின்பால் படியிரண்டில்
நலமாகச் சர்க்கரையைக் கரைத்துக் கொண்டு
அள்ளப்பா வடுப்பேற்றிப் பாக தானால்
அப்பனே முன்தூளைக் கொட்டிக் கிண்டே. (122)

கிண்டப்பா தூளாக நன்றாய்க் கிண்டிக்
கிருபையாய்ப் புதுக்கலசந் தனி லடைத்து
நண்டப்பா வெருகடிதா னிருநேரங் கொள்ள
நலமாகத் தீருநோய் நவிலக் கேளாய்
கண்டப்பா கிராணிவகை யெல்லாந் தீரும்
கருவான பிரமியங்கள் சூசிகா வாயு
கண்டப்பா வாதமொடு பித்த மெல்லாங்
காணும லோடுமடா கண்டு கொள்ளே. (123)

கொள்ளவே யாந்திரமாம் வாயு தீரும்
கூறான மேகவகை வாத சூலை
கொள்ளவே யக்கினியா மந்தந் தீரும்
கூர்ப்பான வாயூறல் வாய்க சப்பு
கொள்ளவே வயிற்றிலுள்ள வியாதி யெல்லாம்
குடிபோகுஞ் சவுபாக்கிய சுண்டி கண்டால்
கொள்ளவே புளிகசப்புப் பத்தி யந்தான்
கூறான புகையோடு பெண்ணுந் தள்ளே. (124)

அக்கினிமுகசூரணம்.

தள்ளப்பா வக்கினியாஞ் சூரணத்தைச் சொல்வேன்
தளமான கொடிவேலி திரிகடுகு ஓமம்
விள்ளப்பா சிறுதேக்கு யானைத்திப் பிலியுங்கோஷ்டம்
விளங்கயதோ ரிந்துப்பு வகையொன்று பலந்தான்
நள்ளப்பா காயங்கால் வசம்பு கால்தான்
நலமான கடுகுபொடி யரைப்பலந்தான் கூட்டித்
தெள்ளப்பா விளவறுப்பாய்ச் சூர ணித்துத்
திறமான சீனிசமங் கூட்டிக் கொள்ளே. (125)

திராட்சாதிசூரணம்.

கொள்ளவே வெருகடித்தூள் வெந்நீரிற் கொள்ளக்
கூறான கிராணிவகை யுதர வாயு
பள்ளவே முகவாயு வாத மெல்லாம்
பறக்குமது திராட்சாதி சூர ணங்கேள்
வள்ளலே முந்திரிகை பேரீச்சம் பழந்தான்
வளமான வதிமதுரம் முட்காய் வேளை
நள்ளவே நெற்பொரியு முத்தக் காசு
நலமான வேலமொடு கிராம்பு கூட்டே. (126)

கூட்டுவாய் கொத்துமல்லி மிளகு வேலி
கூறான திப்பிலியுங் கூகை நீறும்
நாட்டுவாய் சாதிக்காய் சாதி பத்திரி
நலமான வால்மிளகு லவங்கப் பத்திரி
ஆட்டுவாய் வகையொன்று பலமொன் றாக
அப்பனே சூரணித்துச் சர்க்கரையைக் கூட்டி
வேட்டுவாய் வெருகடிதான் தேனிற் கொள்ள
வெகுசுறுக்காய்ச் சொல்லுகிறேன் விவரங் கேளே. (127)

கேளப்பா வாந்திரவாயு பாண்டு ரோகம்
கெடியான தாபசுர மயக்கம் தூக்கம்
வாளப்பா பித்தவகை நாற்பதுந்தான்
வளமான வரோசகங்க ளன்னத் வேஷம்
நாளப்பா வுஷ்ணநோய் சேத்து மங்கள்
நலமான வக்கினியா மந்த வாயு
தாளப்பா கையெரிவு காந்த லெல்லாம்
தவறுண்டு போகுமடா நெய்யிற் கொள்ளே. (128)

அசுவகந்தி சூரணம்.

கொள்ளவே யசுவகந்தி சூர ணங்கேள்
குலமான லவங்கமொன்று நாகப்பூ விரண்டு
தள்ளவே யேலம்நால் மிளகோ ரெட்டு
தளமான திப்பிலியீ ரெட்டு சுக்கு
விள்ளவே முப்பத்தி ரண்டுங் கூட்டி
விசையான வசுவகந்தி யறுபத்து நாலு
நள்ளவே சுத்திசெய் துலர்த்திக் கொண்டு
நலமாக விளவறுப்பாய்ச் சூரணந்தான் செய்யே. (129)

செய்யப்பா சமனுகச் சர்க்கரையைக் கூட்டித்
திறமான வாவின்பால் நெய்யிற் கொள்ளக்
கையப்பா வெருகடிதான் கொள்ளும் போது
கனமான மேகவகை யெல்லாம் தீரும்
மெய்யப்பா வஸ்திசுர வெட்டை போகும்
மேலான சுவாசமோ டீளை போகும்
தையப்பா மேகத்தின் பாண்டு போகும்
தளமான வூறலெல்லாஞ் சாரா தன்றே. (130)

கண்டாத்திரிசூரணம்.

சாரவே கண்டாத்திரி சூரணஞ் சொல்வன்
தருவான விஞ்சியது பலந்தான் பத்து
சேரவே மேற்றோலைப் போக்கிப் போட்டுச்
சிறுகவே நறுக்கியதைப் பழச்சா றாட்டித்

தாரவே நாளொன்று மூறப் போட்டுத்
தவறாமல் மறுநாள்தான் ரவியுலர்த்தி
ஆரவே சீரகமும் பலந்தா னென்று
அப்பனே முன்போலே பழச்சா றாட்டே. (131)

ஊட்டியே மறுநாள்தான் காயப் போட்டங்
குத்தமனே மிளகோடு தாளிசப் பத்திரி
நாட்டியே திப்பிலியின் மூலங் கிராம்பு
நலமான கோஷ்டமொடு வாய் விளங்கம்
வாட்டியே யிளவறுப்பாய்ச் சூர ணித்து
வளமான சர்க்கரைதான் சமனாய்க் கூட்டி
நீட்டியே வெருகடிதான் கொண்டா யானால்
நீங்கிவிடும் பித்தமுதல் வாயு போமே. (132)

போமப்பா வரோசகங்க ளன்ன த்வேஷம்
புகழான பித்தவெட்டை பொருமல் விம்மல்
நாமப்பா வாயுவொடு வாத மெல்லாம்
நாடாது சூலையெல்லா நளின மாகும்
சேமப்பா வயிற்றிலுள்ள வியாதி யெல்லாந்
திறமாகத் தீருமடா பத்யஞ் சொல்வேன்
நாமப்பா வுலகோர்க்கா யிரங்கிச் சொன்னோம்
நலமான சூரணத்தை நாட்டிப் பாரே. (133)

தாளிசபத்திரிசூரணம்.

நாட்டியே சொல்லுகிறேன் புலத்தியனே யையா
நலமான தாளிசபத்திரிச் சூர ணந்தான்
காட்டியே தாளிசபத்திரி பலந்தான் பத்து
கருவான திரிகடுகு திரிப லாதி
நீட்டியே கோஷ்டமோ டக்கரா காரம்
நினைவாக வத்தித்திப் பிலிசீர கமும்
கூட்டியே கொத்துமல்லி வாய் விளங்கங்
கூறான கிராம்பேலஞ் சாதிக் காயே. (134)

காயோடு பத்திரியு மாஞ்சில் சோம்பு
கருவான வால்மிளகு லவங்கப் பட்டை
தாயோடு விவையெல்லாம் பலமொன் றாகத்
தவறாமல் சூரணித்து வடியே கொண்டு
சேயோடு சர்க்கரைதான் சமனாய்க் கூட்டித்
திறமாகப் பிசைந்துகொண்டு வெருகடிதா னேரம்
வாயோடு மண்டலந்தான் கொண்டா யானால்
வாங்குமடா க்ஷயகாச மீளை போமே. (135)

போமடா வஸ்திசுர மஸ்தி வெட்டை
        பொறுக்காத நீர்த்தாகம் புண்ணு நெஞ்சில்
நாமடா பித்தவெட்டை பித்த பாண்டு
        நாடாது கிராணிவகை யெல்லாந் தீரும்
தாமடா வரோசகங்க ளன்னத் வேஷம்
        தளராத விம்மலோடு விக்கல் கக்கல்
சாமடா கைகாலி லெரிவு காந்தல்
        சாந்தமாம் புளியோடு புகையுந் தள்ளே. (136)

பஞ்சதீபாக்கினி சூரணம்.

தள்ளவே பஞ்சதீ பாக்கினி யென்னுந்
        தளமான சூரணத்தைச் சொல்லக் கேளாய்
விள்ளவே திரிகடுகோ டேலஞ் சீரகம்
        விதமாக வகையொன்று பலமொன் ருக
நள்ளவே யிளவறுப்பாய்ச் சூர ணித்து
        நலமாக வடிகொண்டு சர்க்கரைதான் சேர்த்துத்
தள்ளவே தேனெய்யில் வெருகடிதான் கொள்ளத்
        தாமாகத் தீருநோய் செப்பக் கேளே. (137)

செப்புகிறே னுஷ்ணநோய் சூலை வாயு
        சேர்ந்தபித்த வாயுவொடு சிலேத்ம ரோகம்
தப்புகிறேன் பொருமலொடு செரியா மந்தம்
        தளமான மயக்கமொடு கிறு கிறுப்பு
வெப்புகிறே னஸ்திசுர மஸ்தி வெட்டை
        வேறான மூலத்தின் வாயு தீரும்
நப்புகிறேன் புளிகசப்பு புகையுந் தள்ளு
        நலமான காந்தம்வைத்து நலமாய்க் கொள்ளே. (138)

நிலவாகைச் சூரணம்.

நலமாகச் சூரணமொன்று சொல்லக் கேளாய்
        நன்றான நிலவாகை சுக்குங் கூட்டிப்
பிலமாக மிளகுவாய் விளங்க மோமம்
        பேராக வகைக்குமொரு பலமே தூக்கிச்
சிலமாக ரவிமுகத்தி லுலரப் போட்டுச்
        சிதறும லிடித்துச்சூ ரணமே செய்து
தல்மாகச் சர்க்கரைதான் சமனுய்க் கூட்டித்
        தவறும லிருநேரங் கொண்டாற் கேளே. (139)

கேளப்பா வாயுவென்ற தெல்லாம் போகுங்
        கெடியான பித்தமெல்லாங் கீழ்நோக் கிப்போம்
வாளப்பா உஷ்ணநோ யெல்லாந் தீரும்
        வளமான பொருமலொடு விம்மல் தீரும்

நாளப்பா சேத்துமநோ யெல்லாந் தீரும்
நலமான விக்கலொடு வாந்தி தீரும்
தாளப்பா வுடம்பெரிவு சுவாச காசம்
தவறுண்டு போகுமடா சாற்றக் கேளே. (140)

சாற்றுகிறே னீரருகல் மலபந் தங்கள்
தவறாத வயிற்றுவிம்ம லிருமல் தீரும்
தேற்றுகிறேன் குன்மமெட்டு மகோத ரங்கள்
தெளிவான வாயுவெல்லாந் தீருந் தீரும்
ஆற்றுகிறேன் கர்ப்பவலி கர்ப்ப ரோகம்
ஆச்சரியம் புழுக்களெல்லா மகன்று போகும்
காற்றுகிறேன் வெந்நீரிற் கொண்டா யானல்
கலங்காதே வயிற்றிலுள்ள வியாதி போமே. (141)

வல்லாரைச் சூரணம்.

போமப்பா சூரணமொன்று சொல்லக் கேளாய்
புதுமையாம் வல்லாரை பாலிற் போட்டு
நாமப்பா வவித்துலர்த்திக் காயப் போட்டு
நலமாகச் சூரணித்துப் பலம்பத் தானல்
தாமப்பா கிராம் பேலஞ் சாதிக் காயும்
தளமான பத்திரியு மாசிக் காயும்
தேமப்பா தாளிசப்பத்திரி திரிப லாதி
திறமாக விளவறுப்பாய்ச் சூரணந்தான் செய்யே. (142)

செய்யப்பா வகையொன்று பலந்தா னென்று
திறமாக விரண்டுமொன்றாய்ச் சேர்த்துக் கொண்டு
பையப்பா சர்க்கரைதான் சமமாய்க் கூட்டிப்
பதறாமல் வெருகடிதா னெய்யிற் கொள்வாய்
தையப்பா மேகமெல்லாந் தவறுண்டே போம்
சரீரத்தில் காந்தியெல்லாம் சாந்த மாகும்
கையப்பா பிரமியங் கிரந்தி யெல்லாம்
கனமான வுஷ்ணநோய் காணு தன்றே. (143)

காணாது நீரருகல் நீரெ ரிப்பு
கண்ணெரிவு கண்புகைச்சல் காணு தோடும்
தோணாதே யுடம்பெரிவு மூலச் சூடும்
சுருக்கான நீர்ச்சூடுங் குளிர்ந்து போகும்
நாணாது மதுமேகந் தந்தி மேகம்
நாடாது க்ஷயரோக நளின மாகும்
கோணாது தேகமெல்லாங் குளிர்ச்சி காணும்
கொண்டுவா வப்பிரகம் வைத்துக் கொள்ளே. (144)

சஞ்சீவிச் சூரணர்.

கொள்ளவே சஞ்சீவிச் சூரணத்தைச் சொல்வேன்
குணமான சீந்திலடித் தண்டு வாங்கி
விள்ளவே மேற்றோலை வாங்கிப் போட்டு
வெருளாதே நறுக்கியதை யுலரப் போட்டுக்
கள்ளவே யிடித்துநன்றாய்ச் சூர ணித்துக்
கருவாக வடிகொண்டு படித்தூள் வாங்கி
நள்ளவே முந்நூற்றில் சுத்தி செய்து
நலமான பொடிபடிக்கு ஆவின்பாற் படியே. (145)

படியாக அரைப்படிதான் சீனி போட்டுப்
பாங்காக ரவியுலர்த்திக் காய்ந்த பின்பு
அடியாக வுரலிலிட் டிடித்துக் கொண்டு
அப்பனே சாதிக்காய் சாதி பத்திரி
கடியாக வால்மிளகே லங்கி ராம்பு
கசகசா தாளிசமு மாசிக் காயும்
வடிவாக விளவறுப்பாய்ச் சூர ணித்து
வளமாக வகைக்கொரு பலந்தான் கூட்டே. (146)

கூட்டியே யிரண்டுமொன்றாய்ச் சேர்த்துக் கொண்டு
குறையாம லாறுபலஞ் சீனி சேர்த்து
நாட்டியே வெருகடிதா னெய்யிற் கொள்ள
நலமாகத் தீருநோய் நவிலக் கேளாய்
தாட்டிகமா மேகநீ ரிருபதும் போகும்
தளமான பிரமியங்கள் மேக மெல்லாம்
வாட்டியே வற்றியதோர் தேக மெல்லாம்
வளமாகு மஸ்திசுரம் வெட்டை போமே. (147)

போமப்பா மூலத்தின் சூடு போகும்
பொல்லாத பித்தவகை யெல்லாம் போகும்
நாமப்பா கண்ணெரிவு கைகால் காந்தல்
நாடாது தேகமெல்லாங் குளிர்ச்சி யாகும்
தாமப்பா வூறலெல்லாம் தவறுண் டேபோம்
தளமான கபாலத்தி ரணங்கள் தீரும்
வேமப்பா வாலரச செந்தூ ரந்தான்
வெகுசுறுக்காய்ப் பணவெடையப் பிரகங் கொள்ளே. (148)

ஏலாதிசூரணம்.

கொள்ளவே யேலாதிச் சூர ணங்கேள்
குணமான லவங்கமொன்று மிளகி ரண்டு
விள்ளவே நாகம்நால் தாளிச மெட்டு
விதமான கூகைநீறு பதினா றாகும்

நள்ளவே சுக்கதுதான் முப்பத்தி ரண்டு
நலமான வேலமது வறுபத்து நான்கு
கள்ளவே சர்க்கரைதான் சமனுய்க் கூட்டிக்
கலந்துபுதுக் கலசமதிற் பதனம் பண்ணே. (149)

பண்ணவே வெருகடித்தூ ளிருநேரங் கொள்ளப்
பறக்குமடா பித்தமொடு வாதம் வாயு
தண்ணவே கிரந்திரண மரிகி ரந்தி
தளமான மேலூறல் சொரிசி ரங்கு
நண்ணவே சிலவிஷங்க ளுடா தோடும்
நலமான குஷ்டமொடு குறைநோய் தீரும்
பெண்ணவே பெரும்பாடு மெலும்பு ருக்கி
பின்பாரா தோடுமின்ன மொன்று கேளே. (150)

அசுவகந்த பலா லாட்சா தைலம்.

ஒன்றான வுலகத்தோர் நோய்கட் கெல்லாம்
உரைக்கிறேன் தைலமொன் றுறுதி யாக
நன்றான வசுவகந்தி பலா லாட்சா
நாமமது சொல்லுகிறே னவிலக் கேளாய்
சென்றான வசுவகந்தி பலமூ வைந்து
சிற்றாமுட்டி பதினைந்து வெள்ளெருக்கு நாலு
குன்றான நன்னாரி சீந்தில் விலாமிச்சு
கோரையுட னெய்ச்சட்டி யவிரி யெண்ணே. (151)

எண்ணவே நாரத்தை துளசி வெட்டி
இதமான மூலத்தில் பலந்தா னுன்கு
நண்ணவே யகில்நான்கு தேவதார நான்கு
நலமான கீழ்நாடன் பலந்தா னெட்டு
தண்ணவே கொம்பரக்கு பலந்தா னெட்டைத்
தள்ளிவிட்டு வகையெல்லாம் பதினைந்தாகும்
ஒண்ணவே யிடித்துநன்று யிருதூணி நீரில்
ஒருவிறகாய்த் தீயிட்டுச் சோடசத்தொன் றுக்கே. (152)

ஆக்குவா யெள்ளினெய் சேர்தா ஊைந்தும்
அதிற்பாதி தயிர்த்தண்ணீர் பால்சே ரைந்து
தூக்குவாய் கற்கவகை மருந்து கேளாய்
துடியான திரிகடுகு திரிப லாதி
மாக்குவாய் கஸ்தூரி மதுரங் கோஷ்டம்
மாஞ்சில்முச் சீரகமும் பூஞ்சாந்து கந்தம்
பாக்குவாய் மஞ்சள்ரோ கணிசெவ் வள்ளி
பச்சிலைபூ லாமூலங் கிளியூறல் கூட்டே. (153)

கூட்டுவாய் சதகுப்பை லவங்கப் பட்டை
கூறேலம் வகைக்கரைப் பலம தாக
ஆட்டுவா யாவின்பால் விட்டு நன்றாய்
அப்பனே கியாழமெண்ணெய் தனிற் கரைத்து
நாட்டுவா யடுப்பேற்றிக் கொதிக்கும் போது
நலமாக முன்னரக்குக் கியாழம் விட்டு
மூட்டுவா யடுப்பேற்றி முதிரா மற்றூன்
முன்னவற்குப் பூசித்து வடித்தி டாயே. (154)

வடித்திட்ட தைலமது முழுகும் போது
வாகாகத் தீருகிற வியாதி கேளாய்
பிடித்திட்ட மேகத்தின் சூலைபதி னெட்டுப்
போரான வாதத்தின் சூலை தானும்
மடித்திட்ட வாதசுரம் பித்தசுரம் வாயு
மயக்கமொடு சிலேத்மசுர மாண்டு போகும்
அடித்திட்டுச் சண்ணுமடா பித்தவெட்டை யெல்லாம்
அணுகாதே யக்கினியா மந்தந் தானே. (155)

மந்தமொடு பாண்டுவகை யெல்லாம் போகும்
மைந்தனே கண்புகைச்சல் கைகால் காந்தல்
பெந்தமா முடம்பெரிவு சுவாச காசம்
பின்பாரா தோடுமடா மேக மெல்லாம்
பந்தமாம் பத்தியங்கள் புளி கசப்பு
பாங்கான புகையோடு பெண்ணுந் தள்ளு
இந்தவகை யென்னைப்போ லியாருஞ் சொல்லார்
இகத்திலுள்ளோர் பிழைக்கவென் றிரங்கி னேனே. (156)

வில்வாதிதைலம்.

இரங்கியே தயிலமொன்று சொல்லக் கேளாய்
இதமான வில்வாதி யென்ற நாமம்
பரங்கியே வில்வம்விலா மிச்சை கோரை
பாங்கான சஞ்சீவி வகையொன் றுக்குத்
தரங்கியே கீழ்நாடன் பலந்தா னெட்டு
தானிடித்துக் கலவெள்ள நீரிற் போட்டு
அரங்கியே சோடசத்தொன் றுகக் காய்ச்சி
அப்பனே கொம்பரக்கு சேர்தானி ரண்டே. (157)

ரெண்டான தூணிநீ ரெட்டொன் றுக்கி
நினைவாக எள்ளினெய் படிதான் குத்தி
குன்றுன வாவின்பால் சேர்தா னஞ்சு
குலமான கற்கவகை சொல்லக் கேளாய்

நன்றான திரிகடுகு திரிப லாதி
நலமான கஸ்தூரி மதுரங் கோஷ்டம்
கன்றான விருசீர மாஞ்சில் மஞ்சள்
கருதுகந்தங் கிளியூறல் பூஞ்சாங் தென்னே. (158)

என்னவே செவ்வள்ளி லவங்கப் பட்டை
இதமான பச்சையொடு பூலா வேலம்
பன்னவே வகையொன்று பலந்தான் வாங்கிப்
பாங்கான வாவின்பால் விட்டே யாட்டி
முன்னவே கியாழமெண்ணெய் தனிற் கரைத்து
மோகமா யடுப்பேற்றிக் கமல மாகக்
கன்னவே முதிராமற் கவன மாகக்
கணபதியைப் பூசித்து வடித்தி டாயே. (159)

வடித்திட்ட தைலமது முழுகும் போது
வாகாகத் தீருகிற வியாதி கேளாய்
பிடித்திட்ட மேகநீ ரிருப தும்போம்
போரான பித்தவகை நாற்ப தும்போம்
துடித்திட்ட குன்மமெட்டுந் தொலைந்து போகுந்
தொலையாத சிரசில்நோய் சொல்லா தோடுங்
கடித்திட்ட மேகவகை வரட்சி யெல்லாங்
காணும லோடுமடா கருதிப் பாரே. (160)

குமரித்தைலம்.

கருதியே நீகேளாய் புலத்தியனே ஐயா
கருவான குமரியிட தைலஞ் சொல்வேன்
விருதான குமரிநீர் படியி ரண்டு
வெள்ளாவின் பாலதுதான் படியி ரண்டு
தருதான எள்ளினெய் படியி ரண்டு
சாற்றுகிறேன் கற்கவகை திரிகடுகு கோஷ்டம்
வருவான மாஞ்சிலொடு திரிபலையுஞ் சீரம்
மதுரமொடு பூஞ்சாந்தோ டேல மென்னே. (161)

என்னவே பச்சையிலை பூலா மூலம்
இதமான லவங்கப்பத் திரியும் பட்டை
அன்னவே செவ்வள்ளி யக்கரா காரம்
அருளான கஸ்தூரி லவங்கங் கந்தந்
தின்னவே ரோகணியும் செண்பகப்பூ வானைத்
திப்பிலியு மந்திஷ்டி சோம்பு மஞ்சள்
பன்னவே வகையொன்று பலமரைதான் வாங்கிப்
பரிவான வாவின்பால் படிவிட் டாட்டே. (162)

ஆட்டியே கரைத்தெண்ணெய் சாற்றி னுள்ளே
அப்பனே யடுப்பேற்றிக் கமல மாக
மூட்டியே மெழுகுபத மாக வாங்கி
முதிராமல் வடித்ததனைச் சீசாவில் விட்டு
நாட்டுவாய் தானியத்தில் வைத்து மூடி
நலமாக மண்டலங்கால் சென்ற பின்பு
தாட்டிகமாய் மண்டலந்தான் முழுகும் போது
சாதகமாய்த் தீருநோய் சாற்றக் கேளே. (163)

கேளடா மேகமென்ற தெல்லாம் போகும்
கெடியான வஸ்திசுரம் வெட்டை போகும்
தாளடா பித்தமெல்லாஞ் சாந்த மாகுஞ்
சரீரத்தில் வரட்சிமுத ஊறல் போகும்
வேளடா குன்மமெட்டும் பாண்டு வாறும்
வெளுப்பான தேகமெல்லாம் வண்டு போலாம்
வாளடா வயித்தியர்க்காய்த் தைலம் சொன்னேன்
வளமான மனமுடையாய் மகிழ்ந்து பாரே. (164)

கொம்பரக்குத் தைலம்.

மகிழவே கொம்பரக்குத் தைலங் கேளாய்
மகத்தான கொம்பரக்குப் பலந்தா னெட்டு
நெகிழவே தூணிநீ ரெட்டொன் றாக்கி
நிசமான தாளிக்குள் வடித்து விட்டுத்
தகழவே எள்ளினெய் சேர்தா னஞ்சு
தயிர்த்தண்ணீர் சேரிரண்டு பால்சே ரஞ்சு
நிகழவே காடியது சேர்தா னிரண்டு
நிசமாகக் கற்கவகை சொல்லக் கேளே. (165)

கேளப்பா சதகுப்பை கடுகு ரோணி
கிளியூறல் பூஞ்சாந்து பச்சை பூலா
நாளப்பா செவ்வள்ளி லவங்கப் பத்திரி
நலமான லவங்கத்தோல் மாஞ்சில் கோஷ்டம்
தாளப்பா கஸ்தூரி மதுரங் கந்தம்
தயவாக விருசீரம் வெருகு மேலம்
ஆளப்பா வகையொன்று கழஞ்சி ரண்டு
அப்பனே ஆவின்பால் விட்டங் காட்டே. (166)

ஆட்டுவா யெண்ணெய்க்குட் கரைத்து விட்டு
அடுப்பேற்றி மெழுகுபத மான வாறே
நாட்டியே வடித்ததனை முழுகும் போது
நலமாகத் தீருகிற வியாதி கேளாய்

தாட்டியமாம் பித்தவெட்டை யஸ்திசுரம் போம்
 தலைமயக்கம் வாயூறல் சாந்த மாகும்
வாட்டியதோர் சீதசுரம் மாண்டு போகும்
 வற்றியதோர் தேகமெல்லா மூறும் பாரே. (167)

ஊறுமே கனவெட்டை கனசு ரங்கள்
 உத்தமனே கனபாண்டு வெளுத்த தேகந்
தேறுமே தேகத்தில் வலி கடுப்புத்
 திரமான சூலையெல்லாந் தீருந் தீரும்
நாறுமே கற்றாழை புறங்கை வீசி
 நலமான தழுதளையு நாடா தோடும்
சீறுமே காசமெல்லாந் தீர்ந்து போகுந்
 திறமான வொன்றைவிட் டொருநா ளென்னே. (168)

பிருங்காமலக தைலம்.

என்னவே பத்தியந்தான் புளி கசப்பும்
 இதமான புகையோடு பெண்ணு மாகா
தன்னவே தைலமொன்று சொல்லக் கேளாய்
 தனமான பிருங்காமலக தைலஞ் சொல்வேன்
நன்னவே யாமலகச் சாறுபடி யிரண்டு
 நலமான காணிச்சாறு படியி ரண்டு
பன்னவே குமரிச்சாறு படியி ரண்டு
 பாங்கான செவ்விளநீர் படிதா னெட்டே. (169)

படியான சிறுகீரைச் சாறுபடி யிரண்டு
 பழுதில்லா வாவின்பால் படிதா னிரண்டு
செடியான எள்ளினெய் படிதான் மூன்று
 சேர்க்கவிதிற் கற்கவகை மருந்து கேளும்
கொடியான மதுரமொடு கோஷ்ட மேலங்
 குரோசானி பச்சையிலை பூலா மூலம்
கடியான கஸ்தூரி மாஞ்சில் மதுரங்
 கருவான பத்திரியும் சாதிக்காய் கூட்டே. (170)

கூட்டுவாய் லவங்கப்பத் திரியும் பட்டை
 கொடிதான திரிகடுகு திரிப லாதி
நாட்டுவாய் பூஞ்சாந்து சோம்பு வால்மிளகு
 நலமான வகையொன்று கழஞ்சு மூன்று
ஆட்டுவா யாவின்பால் விட்டு நன்றாய்
 அப்பனே சாறெண்ணெய் தனிற் கரைத்து
மூட்டுவா யடுப்பேற்றிக் கமல மாக
 முதிராமல் கணபதிக்குப் பூசை பண்ணே. (171)

பண்ணியே மெழுகுபதந் தனில் வடித்துப்
பாங்காக முழுகிவரத் தீருநோய்கேள்
கண்ணிலே காசமோ டந்தி மாலை
கருவான நேத்திரநோய் தொண்ணூற் றுறு
மண்ணிலே பித்தவெட்டை பித்த வாயு
மயக்கமுட னஸ்திவெட்டை மாண்டு போகும்
தண்ணிலே யுடம்பெரிவு கைகால் காந்தல்
தளமான உஷ்ணநோய் சாரா தென்னே. (172)

சந்தனாதி தைலம்.

சாரவே சந்தனாதி தைலந் தன்னைச்
சார்பான புலத்தியனே சொல்லக் கேளாய்
சேரவே மலாக்காவின் சந்த னத்தூள்
செப்புகிறே னெடையொன்று தூக்கி யேதான்
வாரவே விலாமிச்சு வெட்டி கோரை
வகையுடனே சீந்திலொடு சிற்று முட்டி
காரவே பேராமுட்டி பேரா மல்லி
கருவான சிற்றுமல்லி யசுவ மாமே. (173)

ஆமப்பா நன்னாரி பர்ப்பா டகந்தான்
அப்பனே வகையொன்று பலந்தா னாலு
போமப்பா விருதூணி வெள்ள நீரில்
பொடியாக விடித்திடித் தடுப்பி லேற்றி
நாமப்பா சோடசத் தொன்றாகக் காய்ச்சி
நலமான பாண்டத்தில் வடித்துக் கொண்டு
தாமப்பா செவ்விளநீர் படியி ரண்டு
தப்பாமல் காணிச்சாறு படியிரண்டு வாரே. (174)

வாரப்பா சிறுகீரை படிதா னொன்று
வாகான பொடுதலைச் சாறுபடி யொன்று
சேரப்பா வல்லாரை படிதா னொன்று
சிறுசின்னிச் சாறுதான் படிதா னொன்று
காரப்பா பொற்றலைச் சாறுபடி யொன்று
கருவரன நெல்லியின் சாறுபடி யொன்று
ஆரப்பா கர்ப்பூர வள்ளிச் சாறும்
அழகாகக் கூடவிட்டுப் படிதா னென்றே. (175)

ஒன்றப்பா தாழையிட விழுதின்சாறும்
உத்தமனே யெள்ளினெய் படிதான் மூன்று
நன்றப்பா நறுநெய்தான் படிதா னொன்று
நலமான வாவின்பால் படிதா னாலு

குன்ருன தயிர்த்தண்ணீர் படியி ரண்டு
குறையாமல் பாண்டத்தி லூற்றிக் கொண்டு
சென்றுநீ யடுப்பிலே கொதிக்க வைத்துத்
திறமான கடைச்சரக்குச் சொல்லக் கேளே. (176)

கேளப்பா திரிகடுகு திரிப லாதி
கிருபையாங் கஸ்தூரி மதுர மேலம்
தாளப்பா பூஞ்சாந்து கிளியூறற் பட்டை
தளமான லவங்கப்பத் திரியும் பட்டை
நாளப்பா கிராம்பு சாதிக்காய் பத்திரி
நலமான பச்சையிலை பூலா மூலம்
ஆளப்பா செவ்வள்ளி சண் பகப்பூ
அப்பனே கந்தமொடு சீரமி ரண்டே. (177)

ரெண்டான செங்கழுநீர் கோஷ்ட மக்கரா
நிலையான மந்திஷ்டி பலகை மஞ்சள்
செண்டான சந்தனமு முத்தக் காசும்
திருக்கான வலம்புரிக்கா யிடம்பு ரிக்காய்
குன்ருமல் வகையொன்று பலமரைதான் வாங்கிக்
குலமான வாவின்பால் விட்டே யாட்டி
வென்ருன மேஷப்பால் படியிரண்டில் கரைத்து
வீறவே யெண்ணெயிலே விட்டுக் கேளே. (178)

கேளப்பா வடுப்பேற்றிக் கமல மாகக்
கிருபையால் மெழுகுபதந் தன்னி லேதான்
நாளப்பா கணபதிக்குப் பூசை பண்ணி
நலமான கம்பளியால் வடித்துக் கொண்டு
தாளப்பா குங்குமப்பூ கோரோ சனையும்
தளமான புழுகதிலே கழஞ்சு வீதம்
கோளப்பா பொடித்திட்டுக் கலசத் துள்ளே
குணமாகத் தானியத்தில் வைத்து மூடே. (179)

மூடியே மண்டலங்கால் சென்ற பின்பு
முழுகிவர வேசிகைக்கா யரைப்ப தாகும்
நாடியே தீருகிற வியாதி கேளாய்
நாடாது மேகமென்ற திருப துந்தான்
சாடியே நீரிழிவு நீர ருக்கல்
தள்ளுண்டு போகுமடா க்ஷயந்தா னெட்டும்
காடியே கண்ணெரிவு கண் புகைச்சல்
கையெரிவு காலெரிவு மோடுங் காணே. (180)

ஓடுமடா பிரமியங்கள் ரண கிரந்தி
உத்தமனே கற்றாழை நாற்றந் தீரும்
சாடுமடா வஸ்திசுர மஸ்தி வெட்டை
சரீரத்தில் மயக்கமெல்லாஞ் சாந்த மாகும்
போடுமடா விந்திரகண்டி புண்புரைகள் போகும்
புழுவெட்டு கண்டத்தின் புரைகள் போகும்
தேடுமடா பெண்மேலே மோக மெத்த
சிக்காதே வலையினுள்ளே தெளிந்து நில்லே. (181)

தெளிந்துகொண்டு மாயத்திற் சிக்க வேண்டாம்
தேகத்தி னுள்ளநோய் சிதறிப் போகும்
அளிந்ததொரு குட்டமொடு சொரிசி ரங்கும்
அப்பனே யுள்ளவெட்டை யாறிப் போகும்
நளிந்திந்தத் தயிலமது முழுகும் போது
நன்றான புளியோடு புகை கசப்பு
வளிந்துமிக வாயுவென்ற பதார்த்தந் தள்ளு
வளமாகுஞ் சரீரமெல்லாம் வருண மாமே. (182)

பொன்னுங்காணித் தைலம்.

ஆமப்பா பொன்னுங்காணித் தைலங் கேளாய்
அறிவாயே காணிச்சாறு படியிரண்டு
நாமப்பா கரிசாலை படியொன் றாகும்
நலமான நெல்லிக்காய்ச் சாறுபடி யொன்று
தாமப்பா வெள்ளினெய் படியி ரண்டு
தப்பாம லாவின்பால் படியி ரண்டு
வேமப்பா மதுரமது பலமி ரண்டு
விருதான முலைப்பாலா லரைத்துப் போடே. (183)

போட்டப்பா மெழுகுபதந் தனில்வ டித்துப்
புகழாக முழுகிவரத் தீருநோய் கேள்
நீட்டப்பா நேத்திரநோய் தொண்ணூற் றாறும்
நிலைமைகெட்ட காசமெல்லாம் நீங்கிப் போகும்
வாட்டப்பா பித்தமெல்லாம் வாங்கிப் போகும்
வளமாக நேத்திரங்க ளொளியே மீறும்
நாட்டப்பா வுஷ்ணநோ யெல்லாந் தீரும்
நலமான கீழ்வாய்நெல்லித் தைலங் கேளே. (184)

கீழ்வாய்நெல்லித் தைலம்.

கேளப்பா கீழ்வாயின் நெல்லி தானுங்
கிருபையாய்த் தூக்கிடித்துத் தூணிநீரில்
வாளப்பா வெட்டொன்றாய் வடித்துக் கொண்டு
வளமான வெள்ளினெய் படியி ரண்டு

தேரர்
பொருட்பண்பு வெண்பா.

கடவுள் வணக்கம்

பூதலத்தை யுண்ட புயல்வண்ணன் மாமருகன்
மீதலத்தை யாளும் விநாயகனர்—பாதபத்ம
மாகனகத் தையுளத்தில் வைத்து முருகர்பதக்
கோகனகத் தையுளத்திற் கொள். (1)

அவையடக்கம்.

ஆனு மென்மே லபசார நீர்பொறுத்து
மேனு ளருள்போல் விதிக்கவே—நானு
வகையான பண்டிதரே வாகடத்தி லுள்ள
மிகையான புத்திசொல்லு வீர். (2)

நாடி வகை.

வளிநாடி (வாதம்) தன்மை.

பொன்னு னதுலோக பூபதியா ளுற்போல
எந்நாளு நோய்கட் கிறையாகி—யன்னமாய்
விம்பநடை யாற்கணித வேதாந்த மாநாடி
தம்பநடை யாகும்வா தம். (3)

அழல்நாடி (பித்த) தன்மை.

ஆமாத்தி யற்கு மடங்காத மந்திரியாய்க்
கோமாற்றந் தந்திரிக்குக் கூறியவ—னேமாற்றும்
போது சிவந்து பொழுது கறுப்பிறைக்குத்
தாதுவமோ தும்மாபித் தம். (4)

ஐ நாடி (சேத்தும) தன்மை.

குண்டலத்தா கண்டலனூர் குஞ்சரம்போ லஞ்சாமல்
மண்டலத்து மன்னனுக்கு மந்திரிக்கு—மிண்டாகி
மெய்யுள்கடை நான்கிலென மீளாப் பிணிகேளாய்ப்
பையுளுயிர் நீக்குங்க பம். (5)

யாக்கை யியல்பு.

மன்னனுக்கு மந்திரிக்கு மன்னுபடை யாளனுக்குந்
தன்னதென வில்லாச்சு தந்திரமா—புன்னுயிர்ப்பி
ராணியென்பான் ஒத்திடமாய் நன்றுசெயி லொன்றவனேய்க்
காணியக மாமேயாக் கை (6)

மூன்று நாடிகளின் வரிசை.

கைபார்க்க நாடிகளோர் கைபார்க்கும் வாதத்தை
யைபார்க்கும் பித்த மதைப்பார்க்கும்—மைபார்க்குங்
கண்போல் விரல்களுக்குக் கண்டிருந்துங் காணுதாம்
உண்போதத் தாலறிவா யுன். (7)

முந்நாடிகளின் நாழிகை.

காலமுதற் பத்து கடிகை யளவுகொள்முக்
காலமுமன் மந்த்ரிதள கர்த்தனிவர்—காலமெனக்
கொள்ளிதிலே யன்னோர் குணங்குறிநா டிப்பெயர்ச்சி
யுள்ளிதிலே வந்துமறி யும். (8)

முந்நாடிக் காலம்.

மன்னனுக்குச் செல்கால மந்திரிக்குத் தற்காலம்
பின்னனுக்கு மேற்காலம் பேதமில்லை—யின்னபடி
யானுலு நாடி யததுவா நாடிடிற்
ருனுண்மை நோயினர்க்குத் தான். (9)

ஒவ்வொரு நோயிலும் நாடிக் காலம்.

மந்திரிகா லத்தின்முதன் மத்திகடை யப்பானுன்
கிந்தடைவிற் கன்ன விரண்டரையே— தந்திரிக்கு
மன்னனுக்கு மீதே வகுத்ததுகொண் டெஞ்சியதோர்
கன்னல்மற்ற நோய்கள்கடி கை. (10)

நாடி ஐவகை ஓட்டம்.

நாடி நிதானத்தி னன்மையறி பண்டிதரைத்
தேடி லடங்கித் தெரியார்கள்—ஓடுமதில்
மன்னமைச்சு தந்த்ரி வழிபிறழ லொன்றலறல்
பின்னிடல்முன் னுதலஞ்சு பேர். (11)

முதற்பொருள் வகை.

மண் (பிருதிவி.)

வெண்பொடியா கக்கடவ வேதைகளா கக்கடவ
நண்பொருட்கெ லாங்கவச நன்றாகிப்—பெண்பருவச்
சூலுக் கிசைந்து துரத்து மமைச்சனையும்
மாலெச்சி னீயறிகு வாய். (12)

தண்ணீர் (அப்பு.)

மாலுக் குறவாகி மன்னுயிர்க்கு மன்னுயிராய்
மேலுக் கிரண்டாகி வெண்மையாய்க்—கோலுக்குப்
பாவனமாய்ச் சேனு பதிக்குப் பதியாகுஞ்
சீவனமே சீவனமாந் தேர். (13)

எழுநா (நெருப்புதேயு.)

எந்தெந்த லோக விரதபா ஷாணங்கட்
கந்தந்த வாகிருதி யாகுமே—யந்திவண
ராக முறையா யளியா சனியாகு
நாகமென வீழுமெழு நா. (14)

காற்று (வாயு.)

மாதே யருபாய் வழங்குயிரா யீரறிவாய்
மீதே யுருமல் விளங்குமே—யோதுமகி
பட்சணமாய் நோய்களுக்கு பாயசஞ்சீ விப்பொருளாய்
லட்சணமாய் நிற்குமனி லம். (15)

வான் (ஆகாயம்.)

ஒருணர்வா யெல்லா மொடுங்குவதா யாதிமுதல்
சேருவதாய் வாதபித்த சேத்துமமா—யாரோதை
கண்டவர்க்குங் காணுக் கருப்பொருள்போற் காணுமந்தக்
குண்டலத்தை நீயறிந்து கொள். (16)

பொருள் வகை.

வெண்ணிறப்பசுவின்பால்.

பித்தமெனு மந்திரியைப் பேசாம லோட்டுமகா
ரத்தமுதற் காசத்தை நாட்டாது—நித்தியங்
கவளத்தைச் செல்லுவித்துக் காயத்தைக் காக்குந்
தவளப் பசுவின்சு தை. (17)

துளசி.

மன்னனுக்குச் சீரளித்து மற்றவரைத் தாழவைத்துப்
பின்ன மிலாதுடலைப் பேணியே—மன்னுநிலைப்
பேரணியப் பண்ணும் பிணிக்குப் பிணியாகுந்
தாரணியின் மாலலங் கல். (18)

வேங்கை.

பக்குவமா யாறு பதத்தை வதைத்திடலில்
மிக்க பிணியை விரட்டியுப்—புக்கல்
மணியிரத லோக வகைகளைப்பந் திக்குங்
கணியதனை நன்றாய்க் கணி. (19)

கோன்றை.

பாண்டரங்கர் பூணும்ப் பறக்கடித்து மேகத்தை
யாண்டரங்கக் கைக்குள்வச மாக்குமே—காண்டற்
குதவிசில செய்துடலை யோம்புமது நீபார்
இதழியெனுங் கொன்றைபுவி யில். (20)

புளி.

வேந்தனுக்கே சார்பாகி மேலிருவர்க் கும்பயனுய்ச்
சேந்தனுக்குக் காணியிடஞ் செய்யுமே—சாந்தமிலாப்
பாம்பாக வாகம் பருவரலெய் தப்புரியும்
ஆம்பிர நோய்க்காகா வாம். (21)

ஆல்.

அச்சரம் புண்கிரந்தி ஆவதும்ப யந்தோட
அச்சமுற மேகமுந்தீ யாகுமே—இச்சகத்தில்
நாதனென மூவருக்கு நற்றுணையா மாக்கைக்கும்
பூத மதிபதியைப் போல். (22)

அரிதகி.

மன்னவனை மந்திரியை மாறும லாட்கொண்டு
பின்னவனை யுங்கடிது பேர்க்குமே—மன்னி
யரிதகிக்கு மாபோ லரணியத்தை மீறி
யரிதகிநோய் கட்கிகலே யாம். (23)

அசோகு.

வாதபித்த சேத்ம வரிசைபெறு மூவருக்கும்
ஆதரவாய் மெய்யி லமருமே—பூதலத்தில்
வீண்பிண்டி போல விடுமுடம்பை யுந்தணிக்கும்
காண்பிண்டி யாமசோ கம். (24)

எருக்கு.

மன்னனையுங் கையெடுக்க வைத்தெயிற்றி னேயகற்றி
யுன்னு பிணிப்பனியை யோட்டுதலாற்—சொன்னேன்
எருக்கெனவே பூமி யினிலே விளங்கும்
அருக்க மருக்கனென லாம். (25)

சம்பீரம். (எலுமிச்சை)

மந்திரிக்கு மந்திரியாய் மன்னனுக்கு மன்னனெனத்
தந்திரிக்கு மித்திரன்போற் சாருமே—முந்தவரு
கெம்பீர மாய்ச்சரக்கின் கெண்ணியமாய் வாகடர்க்குச்
சம்பீர மாமெலுமிச் சை (26)

ஏரண்டம்.

வாதத் தொடக்கை வரவொட்டா மற்படிக்குக்
காதத்துக் கப்பாற் கடியுமே—சூதத்தைப்
பேரண்டப் பந்திக்கும் பேதிக்கு நோய்க்காட்டை
யேரண்ட மென்பதினி யே. (27)

ஆடுதீண்டாப்பாளை.

கிரந்திகரப் பான்வெக்கை கேசநலி மாந்தை
யரந்தை வினையை யறுக்குந்—துரந்து
பிரியொணு நோய்களையும் பின்முன்பா ராமல்
மறியுணு மூலியடை வாய். (28)

மெருகங்கிழங்கு.

அரச னமைச்ச னதிகாரி சேனைக்
கரச னிவர்க்கிகலே யாகிப்—பொருவும்
மிருகமெனு நாயைமுயல் மேல்விடுதல் போல
வெருகடியை யேவுவினை மேல். (29)

கணை.

ஈளை யிரும லிரைப்புப் புசபிணிகள்
மாள வொழியாமல் வாட்டுமே—யாளுமுறை
பாங்கா யறிந்துசெய்வீர் பண்டிதத்தைப் பண்டிதரே
வேங்கைவாய்ப் பானகணை மெய். (30)

சிவனார் வேம்பு.

குட்டஞ் சிரங்கு குறைப்புப் புசமாந்தை
கட்டப் பிணிகள் கழலுமே—திட்டம்
உரனிம்பங் காயத்துக் குண்டாகு மேலை
அரனிம்ப மென்னுமருந் தால். (31)

வேம்பு.

புந்தியினைத் தீட்டுவிக்கும் புன்பிணியை யோட்டுவிக்கு
மிந்தியத்தை நன்று யிசைவிக்குஞ்—சந்ததமும்
வீறுண்டாங் கற்ப மிகவுண்டா மெஞ்ஞான்று
மாறன்று ரையமில்லா மல். (32)

ஆகாசத்தாமரை.

வேண்டினு லுண்டாம் வியாதியில்லாப் பேரின்பம்
பூண்ட தினகரனைப் போலவே—மீண்டுமினி
யான விரத மனைத்தும் வலுவிக்கும்
வானவம்பு சத்தைமிக வை. (33)

ஓரிதழ்த்தாமரை.

சுரத்தைக் கடிந்து சுவாசத்தைப் போக்கி
யுரத்தை யுடலுக் குதவும்—பருத்தவுடல்
வாடா தனுதினமும் வைத்தடிக்கு மேகத்தை
யேடேக கோகனக மே. (34)

வர்னனே.

வாதகுரு வாயுடம்பு வாதமறுத் தப்படியே
வேதையுலோ கங்களிலே வேண்டினுற்—பாத
விரதமுதற் கையாட லென்று லிசையும்
வரனனையை நீமனதில் வை. (35)

தேள்கடை.

வங்கத்தி னீர்வாங்கும் வாத குருவாகுந்
தங்கத்தைக் காண்பிக்குந் தப்பாது—எங்க
மரிச்சு விடாமல் வளர்க்குமெந் நாளும்
விருச்சிகக் கூலமிது மெய். (36)

மரிசம்.

மூவருக்கு முன்னிகலாய் முன்னுறவாய் மற்றபிணி
யாவருக்கு மேலா யிருக்குமே—தேவருக்கும்
எண்ணப்ப தார்த்த மெனமும்மூர்த் திக்கிரிகை
தண்ணப்பிர தாபமரி சம். (37)

முல்லை.

மருந்தெவ் விதமேனு மாறு ததற்குத்
திருந்து முபதையெல்லாஞ் செய்யும்—பொருந்துமகி
மேன்மிகுவே கங்கொடுக்கும் வெம்பிணியைச் சாடுதலால்
மான்மனையே பண்டிதர்க்கு வாள். (38)

வில்வம்.

உண்டிக் கனுகரண முற்றதுணை கொற்றவற்குத்
தண்டிக்க வல்ல சமர்த்தென்ன—வெண்டிக்கும்
மேலார் பதார்த்தமென மேதினியெல் லாந்துலங்கு
மாலூ ரளித்தபெரு மை. (39)

வேல்.

பல்லுக் கடுத்த பலநோ யகற்றியதைக்
கல்லுக்கு நேராகக் காட்டுமே—மல்லுக்கு
நண்மின்வினை காளெனப்போய் நாளும் வியாதிகளைச்
சண்மயில வன்னுயு தம். (40)

வாளம்.

எந்த வியாதி யினங்களையுஞ் சாடிமல
பந்த வினையைப் பரிகரித்து—வந்தவெப்பைப்
பாபியென மாட்டுதலால் பாடாண வெம்மையினுஞ்
சோபிமகா சோபியென்று சொல். (41)

அறுகு.

போகாத தோடவினை போகப் பிணியகன்று
தேகாதி யெல்லாஞ் செழிக்கவே—வாகாய்
அடர்தந்தை பிள்ளைக் கணியா தலினல்
இடமாங் கணபதி பத்திரம். (42)

பிடகர்.

மணிமந் திரவவிழ்த மார்க்கந் தெரிந்து
பிணிக ளறிந்தொதுக்கிப் பின்னுந்—தணிய
வுடலை வளர்த்திடலா லுத்தியினு லாலால்
பிடகர் வயித்தியர்க்குப் பேர். (43)

காந்தட்கிழங்கு.

தேவி யுரத்தையுமா தேவ பலத்தையுமோ
ராவியெனக் கட்டியுற வாக்குமே—நோவுகளை
யேன்றுகொண்டு மாட்டுமுமை யின்மதலைக் கில்லிடத்தாந்
தோன்றியெனுங் காந்தளடித் தூள். (44)

திப்பிலி.

கட்டியெதிர் நின்று கடுநோயெல் லாம்பணியுந்
திட்டி வினையகலுந் தேகமெத்த—புட்டியாம்
மாமனுக்கு மாமனென மற்றவர்க்கு மற்றவனுங்
காமனெனுந் திப்பிலிக்குக் கை. (45)

சேர்ந்தாரைக்கோல்லி.

அவிழ்த முலோகமும் மாகுநோய் மெய்மை
தவிசங்கண் முன்னுறுதி தாளுய்க்—கவிபிணியை
யார்ந்தவுடற் கப்புறமே யாக்கிமிகு பாக்கியமாஞ்
சேர்ந்தாரைக் கொல்லியெனுந் தீ. (46)

வெற்பேந்தி.

எய்த்துநரர் போகாம லிந்தியத்தைப் பந்தித்து
மெய்த்தனுவை வெற்பாக்கு விக்குமே—பொய்த்தவரும்
கற்பாந் தரமாக வீடளிக்கு நம்பினர்க்கு
வெற்பேந்தி மெய்க்குறுதி மெய். (47)

காதணியோம்பி.

கட்டியெதிர் சேவிக்குங் காயசித்தி யுண்டாக்கும்
வெட்டவின்றி லோகமெல்லாம் வேதிக்குங்—குட்டமறும்
ஆதரவுண் டாகுமிக வாக்கைக் கனுதினமுங்
காதணியோம் பிக்குவினை கை. (48)

மாக்கல்வம்.

கல்லெனும்பா ஷாணத்தைக் கட்டுவிக்கு மேகத்தைக்
கொல்லு முடலைக் குளிர்விக்கும்—உல்லாசம்
ஆக்கு முயிர்நிலையை யாதரிக்கு மெஞ்ஞான்றும்
மாக்கல்வ மூலி மகிமை. (49)

பல்லியமெழுப்பி.

பித்த முதலான பிணியைக் கருவறுக்குஞ்
சத்தையெனக் கட்டுஞ் சரக்குகளை—வித்தையல
வல்லமையே மன்னனுக்கும் வாய்த்த துணையாகும்
பல்லிய மெழுப்பிதா பம். (50)

தாமரை.

சலதோஷங் காமாலை சத்திவிக்க லான
பலதோஷங் கட்குமிடர் பண்ணுங்—கலையாக்
கபமுரியச் சாடுமிகு காயசித்தி யாக்குந்
தபன்னட் பாகுமம்பு சம். (51)

தூதுவேளை.

வேர்ப்புறணி யானுடற்கு மேன்மை யளித்திடலால்
தாற்பொடியாற் சுக்கிலத்தைத் தம்பித்து—வேர்த்திடமெய்
முந்திடவை யாதுரத்தை மூட்டுதலா லெஞ்ஞான்றுந்
தந்தியர சானனமாந் தம். (52)